## விம்கோ நகர்- சென்ட்ரல்- விமான நிலையம் வரை

# மெட்ரோ ரெயிலில், நாளை தேர்தல்-கொரோனா விழிப்புணர்வு இசை நிகழ்ச்சி

## மாலை 5 மணி முதல் இரவு 7 மணிவரை நடக்கிறது

சென்னை, மார்ச். 26–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:–

மெட்ரோ ரெயில்

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் 'ஆன் தி ஸ்டிரிட் ஆப் சென்னை' கலைக் குழுவினருடன் இணைந்து நடத்தும் மெல்லிசை விழிப்புணர்வுக் கலை நிகழ்ச்சி நாளை (27–ந் தேதி) மாலை 5 மணி முதல் இரவு 7 மணிவரை விம்கோ நகர் ரெயில் நிலையத்தில் இருந்து சென்ட்ரல் மெட்ரோ நிலையம் வரை மற்றும் சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில் இருந்து விமான நிலையம் வரை செல்லும் (கோயம்பேடு வழியாக) மெட்ரோ ரெயிலில் நடைபெறுகிறது.

கலை நிகழ்ச்சிகள்

இந்த நிகழ்ச்சியில் நடைபெற உள்ள தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் வாக்களிப் பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது.

மேலும், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் 'பாரதியார் சிலம்பம் பயிற்சி மையம்' அமைப்புடன் இணைந்து நாளை (27–ந் தேதி) மாலை 5 மணி முதல் 6 மணிவரை புரட்சித் தலைவர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் (தெரு நிலை) வாக்களிப்பதன் அவசியம் மற்றும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த பல்சுவை விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்துக்காகவும் மெட்ரோ ரெயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ ரெயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் முககவசம் அணிந்து இருப்பதுடன் தனி மனித இடைவெளியை கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்துக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விழிப்புணர்வு

சென்னை மாநகரில் வசிக்கும் மெட்ரோ ரெயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள், மெட்ரோ ரெயில் நிலையங்களில் நடைபெறும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு மற்றும் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வுக் கலை நிகழ்ச்சிகளை கண்டுகளித்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.